பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 01 2025 **TUESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் வளர்ச்சியில் ஒடிசா மாநிலம் முக்கியப் பங்கு வகித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- நாட்டில் சில்லறை டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை கடந்த 12 ஆண்டுகளில் 100 மடங்கு அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.
- முல்லைப் பெரியாறு அணை உறுதியாக உள்ளதாக உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் ஸ்காட்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

>>>>>>><<<<<<<

நாட்டின் வளர்ச்சியில் ஒடிசா மாநிலம் முக்கியப் பங்கு வகித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் இன்று ஒடிசா உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை தொடங்கி வைத்த அவர், இம்மாநாட்டை ஒட்டி நடைபெறும், உற்பத்திக்கான ஒடிசா கண்காட்சியையும் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், இந்த மாநாடு, ஒடிசாவின் வரலாற்றில் மிகப்பெரிய முதலீட்டாளர்கள் மாநாடாக அமையும் என்று கூறினார்.

இதற்கான ஏற்பாடுகளை செய்த ஒடிசா மாநில அரசுக்கும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

மேலும், நாட்டின் வளர்ச்சியில் கிழக்கு மாநிலங்கள் முக்கியப் பங்கு வகிக்கும் என்று நம்புவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

உலகின் முன்னேற்றத்திற்கு இந்தியா பெரும் பங்களிப்பை வழங்கி வரும் நிலையில், நாட்டின் கிழக்கு மாநிலங்கள் அதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

நாட்டில் சில்லரை டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை கடந்த 12 ஆண்டுகளில் 100 மடங்கு அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 2012-13ஆம் நிதியாண்டில் 162 கோடியாக இருந்த சில்லரை டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள், 2023-24ஆம் நிதியாண்டில் 16 ஆயிரத்து 416 கோடி பரிவர்த்தனைகளாக அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பணப்பரிவர்த்தனை கட்டமைப்பு மற்றும் பணப்பரிவர்த்தனை செயல்பாட்டு குறியீடுகளும் கடந்த ஆறு ஆண்டுகளில் நான்கு மடங்கிற்கும் அதிகமாக உயர்ந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் ஒட்டுமொத்த டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளும் அதிகரித்துள்ளதாகவும் ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

வெளிநாடுகளுடனான விரைவு பணப்பட்டுவாடா நடைமுறைகளை இணைப்பதன் மூலம் குறைந்த செலவில் தடையற்ற பரிவர்த்தனைகளை மேற்கொள்வதிலும் ரிசர்வ் வங்கி கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

சுதந்திரப் போராட்ட வீரர் ‘பஞ்சாப் கேசரி’ என்றழைக்கப்படும் லாலா லஜபதிராயின் பிறந்த நாளையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அமைச்சர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் விடுதலையில் லாலா லஜபதிராயின் பங்களிப்பு மக்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த மற்றும் சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதற்கான லஜபதிராயின் கனவை நனவாக்க உறுதியேற்போம் என்றும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

முல்லைப்பெரியாறு அணை உறுதியாகவும் நிலையானதாகவும் உள்ளது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அணையின் பாதுகாப்பு தொடர்பான மனுவை இன்று விசாரித்த நீதிபதி திரு. ரிஷிகேஷ் ராய் தலைமையிலான அமர்வு,135 ஆண்டுகளைக் கடந்தும், இந்த அணை உறுதியாக இருப்பதாக கூறியுள்ளது.

இதற்காக அணையை கட்டிய பொறியாளர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

அணை உடைந்து விடும் என்ற அச்சம் தேவையில்லை என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த மனுவை, முல்லைப்பெரியாறு அணை தொடர்பான பிரதான வழக்கை விசாரித்து வரும் அமர்வுக்கு மாற்றியும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

>>>>>>><<<<<<<

நாடுமுழுவதும் 23 ஆயிரம் கிலோமீட்டர் வழித்தட தொலைவுக்கான ரயில் பாதைகள் மேம்படுத்தப்பட்டிருப்பதாக ரயில்வே துறை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ரயில்களை மணிக்கு 130 கிலோமீட்டர் வேகத்தில் இயக்க வகை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 54 ஆயிரம் கிலேமீட்டர் வழித்தட ரயில்பாதைகள் மணிக்கு 110 கிலோமீட்டர் வேகத்தில் ரயில்கள் செல்லும் வகையில் மேம்படுத்தப்பட்டிருப்பதாக ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் தடையற்ற போக்குவரத்து வசதிகளை உறுதி செய்வதுடன், ரயில்வேயின் ஒட்டுமொத்த செயல்திறனையும் அதிகரித்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.

தண்டவாளங்கள் சீரமைக்கப்பட்டிருப்பதோடு, அதிநவீன சிக்னல்கள், தொலைத்தொடர்பு கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டிருப்பதுடன் விபத்துகளை தவிர்க்கும் விதமாக ரயில்பாதையை ஒட்டி வேலிகளும் அமைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நடப்பு நிதியாண்டில் கடந்த டிசம்பர் மாதம் வரையிலான வருவாயும் முந்தைய ஆண்டைவிட 4 சதவீதம் அதிகரித்திருப்பதாகவும் ரயில்வே தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

பிரயாக்ராஜ் மகா கும்பமேளா நிகழ்ச்சியில் இதுவரை 15 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளதாக உத்தரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

நாளை மௌனி அமாவாசை தினத்தில் புனித நீராடவுள்ள பக்தர்களின் வசதிக்காக பல்வேறு ஏற்பாடுகளை உத்தரப்பிரதேச அரசு செய்துள்ளது.

தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ளும் வகையில், வாட்ஸ் அப் சேவையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

>>>>>>><<<<<<<

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் 425 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்துப் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - முதலமைச்சர் 29 செகண்ட்ஸ்)

முன்னதாக, வழுதரெட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சமூகநீதிப் போராளிகள் மணிமண்டபம் மற்றும் முன்னாள் அமைச்சர் கோவிந்தசாமியின் நினைவு அரங்கத்தையும் திரு. மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

>>>>>>><<<<<<<

ஐஎஸ்ஐஎஸ் இயக்கத்திற்கு ஆள் சேர்த்த குற்றச்சாட்டின் பேரில், சென்னையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் இன்று கைது செய்துள்ளனர்.

மயிலாடுதுறையைச் சேர்ந்த அந்த இளைஞர் சென்னை புரசைவாக்கத்தில் தனியார் ஆம்புலன்ஸ் ஓட்டுநராக பணியாற்றி வந்த நிலையில், இன்று அதிகாலை அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள், தமிழகம், கேரளா மற்றும் கர்நாடக மாநில காவல்துறையினருடன் இணைந்து சென்னையில் ஐந்து இடங்களிலும், மயிலாடுதுறையில் 15 இடங்களிலும் சோதனை நடத்தியுள்ளனர்.

>>>>>>><<<<<<<

இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களில் 2025 – 26 கல்வியாண்டில் பயல வரும் இலங்கை மாணவர்கள் 200 பேருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்று இலங்கைக்கான இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், உணவு மற்றும் தங்குமிடச் செலவுகள், புத்தகம் மற்றும் எழுதுபொருட்களுக்கான செலவுகள் முழுமையாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்தியா வருவதற்கான விமானக் கட்டணம், கல்விச் சுற்றுலாவிற்கான நிதியுதவி, விடுதி வசதிகளும் செய்து தரப்படும் என்று இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியா - இலங்கை இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பை அறிவாற்றல் பகிர்வு மற்றும் திறன் மேம்பாடு மூலம் வலுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-6 சுற்றில் ஸ்காட்லாந்துக்கு எதிராக முதலில் பேட் செய்து வரும் இந்தியா 8 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 78 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக டாஸ் வென்ற ஸ்காட்லாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களில் இந்தியா வெற்றிபெற்று முன்னிலை பெற்றுள்ளது.

>>>>>>><<<<<<<

தேசிய விளையாட்டுப் போட்டிகள் டேரோடூனில் இன்று தொடங்குகின்றன. பிரதமர் திரு. நரேந்திர மோடி இதனை தொடங்கி வைக்கிறார்.

>>>>>>><<<<<<<

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டிகள் பாங்காக்கில் இன்று தொடங்கின.

இந்தியா சார்பில் கிடாம்பி ஸ்ரீகாந்த், ஆயுஷ் ஷெட்டி, தருண் மன்னபள்ளி உள்ளிட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

>>>>>>><<<<<<<

தோஹாவில் நடைபெற்று வரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Sayali Wani -** துனிஷியாவின் **Wassim Essid** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<<

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே மூன்றாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று ராஜ்கோட்டில் நடைபெறுகிறது.

>>>>>>><<<<<<<